## நடன நிகழ்ச்சி



பெங்களூர் ரவீந்திர கலா சேத்திரா மண்டபத்தில், பி.இ.எல். நிறுவன அதிகாரி. எஸ்.விசுவநாத்தின் மகள் மஞ்சுளாவின் பரத நாட்டியநிகழ்ச்சி நேற்று இரவுநடந்தது

ஈராக் பிடியில் இருந்து

# 'குவைத்தை விடுவி…

## 6 அரபுநாடுகள் சபதம்

பக்ரைன், செப். 8—

"ஈராக் பிடியில் இருந்து குவைத் நாட்டை விடுவிப்போம்" என்று 6 அரபு நாடுகள் அறிவித்து இருக்கின்றன.

### ஈராக் ஆக்கிரமிப்பு

எண்ணை வளம் மிக்க குவைத் நாட்டை கடந்த ஆகஸ்டு மாதம் 2-ந்தேதி ஈராக்நாடு கைப்பற்றியது இந்த ஆக்கிரமிப்பு அரபு நாடுகளில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி இருக்கிறது. போர் மூளும் அபாயம் உருவாகி இருக்கிறது.

குவைத்தைவிட்டு வெளியேறுமாறு உலகநாடுகள் விடுத்த வேண்டுகோளையும் ஈராக் அதிபர் சதாம்உசைன் நிராகரித்து விட்டார்.

ஆகவே இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி பற்றி ஆலோசனை செய்வதற்காக 6 அரபு நாடுகளின் வெளிநாட்டு மந்திரிகள் அவசரமாக கூடினார்கள். சவுதிஅரேபியா நாட்டில் உள்ள ஜெத்தா நகரில் இந்த கூட்டம் 2 நாட்களாக நடைபெற்றது.

### விடுவிப்போம்

கூட்டத்தில் சவுதி அரேபியா குவைத், பக்ரைன், கத்தார், ஓமன், ஐக்கியஅரபு எமிரேட் ஆகிய நாடுகள் கலந்து கொண்டன.

ஈராக் பிடியில் இருந்து குவைத்தை விடுவிப்பது என்று இந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கூட்ட முடிவில் 6 அரபுநாடுகளின் வெளிநாட்டு மந்திரிகள் சார்பில் ஓர் அறிக்கை வெளியிடப்பட்டது அதில் கூறப்பட்டு இருப்பதாவது:—

"குவைத்தை ஈராக் இணைத்துக் கொண்டது செல்லாது ஈராக் பிடியில் இருந்த குவைத்தை மீட்க சபதம்செய்து இருக்கிறோம் இதற்காக எங்கள் சக்தி முழுவதையும் ஒன்று திரட்டுவோம்.

### ஈராக் பொறுப்பு

இப்போது ஏற்பட்டு இருக்கும் நெருக்கடியை பேச்சுவார்த்தை மூலமே தீர்த்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது இதுவரை நடந்த பேச்சுவார்த்தைகள் தோல்வி அடைந்ததற்கு ஈராக் தான் பொறுப்பு நாங்கள் பொறுப்பு அல்ல.

ஈராக்கின் நடவடிக்கைகள் உலகத்தை போர் விளிம்புக்கே கொண்டு சென்று விட்டன.

### வேண்டுகோள்

ஆக்கிரமிப்பு செய்துள்ள ஈராக்கை கண்டனம் செய்யாத சகோதர அரபுநாடுகள் தங்கள் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும் தேசநலனை காக்க அந்த நாடுகளும் ஈராக்கை கண்டிக்க முன்வர வேண்டும்.

ஈராக் விட்டுக் கொடுக்காமல் பிடிவாதமாக இருந்தால் அரபு நாடுகளுக்கு அழிவு ஏற்படும்.

ஐ.நா. சபை தீர்மானஅடிப்படையில் அமைதியாக தீர்வு காண்பதற்காகவே இந்த வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

இவ்வாறு மந்திரிகள் அறிக்கையில் கூறப்பட்டு இருக்கிறது.

### ராணுவச் செலவு

ஈராக் படைகள் தாக்கினால் அதைமுறியடிக்க சவுதிஅரேபியா நாட்டில் அமெரிக்க படைகள் குவிக்கப்பட்டு இருக்கின்றன.

"இந்த படைகளுக்கு ஆகும்…

## ஜனாதிபதி வெங்கடராமன்

# 'ஜோக்' அருவியை காண வருகிறார்

## கர்நாடகத்தில் 2 நாள் சுற்றுப்பயணம்

பெங்களூர் செப். 8—

ஜனாதிபதி வெங்கடராமன் கர்நாடகத்தில் 2 நாள் சுற்றுப்பயணம் செய்கிறார்.

…

காட்டப்படும்.

மேலும் "ஜோக்" அருவியின் "ராஜா" "ராணி" "ரோரர்"…

…ஒளிபரப்பவும் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது"

இவ்வாறு வீரப்ப மொய்லி கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:—

### சுற்றுலா மேம்பாடு

"இந்திய சுற்றுலா வளர்ச்சி ஆண்டாக, 1991-ம் ஆண்டு அறிவிக்கப்பட்டு இருப்பதையொட்டி வெளிநாட்டு பயணி…